
# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# தேவனுடைய வல்லமையால் எபோலா போன்ற தொற்றுநோய்களை ஒழித்துவிட முடியும்




அறிவர். ஜோக் லீ அவர்களின் ஜெபத்தினால் இஸ்ரேலில் இருந்து பன்றிக்காய்ச்சலும் (2009), DR காங்கோவிலிருந்து எபோலா வைரசும் (2014), கொரியாவிலிருந்து மெர்ஸ் தொற்றுநோயும் (2015) வெளியேற்றப்பட்டது. சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமை மீது விசுவாசம் வைத்து நாம் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டால், நம்முடைய ஆத்துமா விருத்தியடையும். அனைத்தும் செழிப்பாக மாறும். நாமும்கூட ஆரோக்கியமாக இருப்போம்.

14வது நூற்றாண்டில், 30% ஐரோப்பிய ஜனத்தொகையை கருப்புச் சாவு (பிளேக்) என்னும் வியாதி கொன்றது. 19வது நூற்றாண்டில் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் காலராவால் மாண்டனர். மனிதனை சீக்கிரத்தில் மரணத்திற்குள்ளாக்கி, திரள் ஜனக்கூட்டத்தை கொல்லச் செய்த வியாதி தொற்றுவியாதிதான்.

1881ல், லூயிஸ் பாஸ்ச்சர் ஒரு தடுப்பூசியை உண்டாக்கினார். அது தொற்று வியாதிக்கு சிகிச்சை கொடுப்பதில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. அவரின் கண்டுபிடிப்பு ஜனங்களை அநேக வியாதிகளிலிருந்து காப்பாற்றியது. ஆனால் இன்றைக்கு அளவுக்கு அதிகமான நுண்ணுயிர் மருந்துகளை எடுத்துக் கொள்வதால் மனிதர்களுடைய நோய் எதிர்ப்பு மண்டலமானது பெலவீனப்பட்டுள்ளது. அவர்கள் சிறு கிளர்ச்சியூட்டக்கூடிய மருந்தையே தாங்கக்கூடாதவர்களாய் இருக்கின்றனர். ஒருவேளை வேகமாக பரவி, சீக்கிரத்தில் உயிரைப் பறிக்கக்கூடிய ஒரு வலிமையான வைரஸ் தோன்றினால் என்னவாகும்?

அதற்கான தடுப்பூசி உருவாவதற்கு முன்னமே அது உலகமெங்கிலும் பரவிச் சென்று, எண்ணற்ற ஜனங்களுடைய உயிரைப் பறித்துவிடும். எப்படியிருந்தாலும், சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமையை நம்புவதின்மூலம் அது அகன்று போய்விடும்.

செப்டம்பர் 2014ல், DR காங்கோவிலுள்ள ஈக்குவெடாரின் ஆளுநர் செபாஸ்டின் இம்பெடொ பெங்கோ என்பவர் தலைமை போதகர் அறிவர். ஜோக் லீ அவர்களுக்கு ஒரு ஜெப விண்ணப்பத்தை அனுப்பினார். அந்த ஜெபவிண்ணப்பமாவது: "எபோலா வைரஸானது ஜெரா பகுதி, போய்ன்டி பட்டணம், ஈக்குவடார் மாகாணத்தில் பரவிக் கொண்டிருக்கிறது. அதிபர் ஜோசப் கபிலா எந்த விதத்திலாவது எபோலா வைரஸால் உண்டாகும் நோய்களை அகற்றிவிடுமாறு கூறியுள்ளார். அதற்காக தாங்கள் ஜெபிக்க வேண்டும் என நான் வேண்டுகிறேன்."

அவர் கின்ஷாசா மான்மின் சபையில் ஒரு கண்காணியாக இருக்கிறார். அவர் எண்ணற்ற அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளை கண்டிருக்கிறார். விசுவாசத்தோடு அவர் இந்த ஜெப விண்ணப்பத்தை அனுப்பினார்.

எபோலா வைரஸானது 1976ல் முதன் முதலாக எபோலா நதியண்டையில் தோன்றியது. அது ஒரு புது வகையான சக்தி வாய்ந்த வைரஸாகும். அதை தடுக்கக்கூடிய தடுப்பூசியோ சிகிச்சையோ இதுவரை கண்டறியப்படவில்லை. எபோலாவானது பாதிக்கப்பட்ட ஜனங்களின் குருதி, சுரப்பிகள், உறுப்புகள் அல்லது மற்ற உடல் திரவங்கள் மூலமாக நேரடியான தொடர்பினால் மனிதர்களுக்கிடையே பரவுகின்றது. இதன் சராசரி இறப்பு விகிதமானது ஏறக்குறைய 50% ஆகும். கடைசியாக பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் இறப்பு விகிதம் 25% முதல் 90% வரையாக இருக்கிறது. இதற்கென்று எவ்வித சரியான சிகிச்சை முறை இல்லை.

எபோலா வைரஸ் தோன்றிய முதல் நாடு DR காங்கோவாகும். அது 2014 வரை ஏழு முறை தோன்றி பரவியது; ஜனங்கள் அதிக பயத்தில் இருந்து வந்தனர். மார்ச் 2014ல், மேற்கத்திய ஆப்பிரிக்காவில் இருக்கும் கினிவா என்ற இடத்தில் அது தோன்றி, உலகமெங்கிலும் பரவ ஆரம்பித்தது. ஆகஸ்டு 2014ல் DR காங்கோவில் உள்ள ஈக்குவடாரில் முதல் நோயாளி கண்டறியப்பட்டார்; பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் விரைவாக உயர்ந்தது.

செப்டம்பர் 21, 2014ல் அறிவர். லீ அவர்கள் தம்முடைய ஜெபமலை நாட்களில் ஜெப விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் எபோலா வைரஸானது DR காங்கோவிலிருந்து மறைந்துப் போகும்படி ஜெபித்தார். அதன்பின்பு ஆச்சரியமளிக்கும் விதத்தில் மரணத்தின் எண்ணிக்கை குறைந்துப் போனது; DR காங்கோவில் எபோலா இல்லாமற்போனது.

ஆளுநர் செபாஸ்டின் இம்பெடொ பெங்கோ சொன்னதாவது, "தலைமை போதகர் DR காங்கோவிற்காக ஜெபித்த பிற்பாடு, எபோலா வைரஸ் பரவுவது நின்றுப்போனது; அதன் பிறகு அதினால் ஒருவரும் மரிக்கவில்லை. நாங்கள் எபோலா வைரஸானது முற்றிலும் மறைந்துவிட்டதா என்பதை அறிந்துகொள்ள துல்லியமான மருத்துவ செயல்முறைகளை செயல்படுத்தினோம். பின்பு, நாங்கள் எபோலா வைரஸானது முற்றிலுமாக ஒழிந்துப்போனது என்பதை கண்டறிந்தோம்."

அக்டோபர் 24 அன்று, DR காங்கோ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அறிவர். லீ அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார். அதில், "ஈக்குவடாரில் எபோலா வைரசுக்காக ஜெபித்ததற்காக நன்றி தெரிவிக்கிறேன். உங்களுடைய ஜெபத்திற்கு நன்றிகள். இனி தொடராதபடிக்கு எபோலா வைரஸின் தொற்றானது நிறுத்தப்பட்டுவிட்டது" என்று கூறியிருந்தார்.

நவம்பர் 15, 2015ல் DR காங்கோவின் அதிபர் ஜோசப் கபிலா, ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில் தன்னுடைய நாட்டில் எபோலா வைரஸானது நீங்கிப்போனது என்று வெளிப்படையாக அறிவித்தார்.

இயேசு மத்தேயு 24ல் சொன்னபடி, அநேக ஜனங்கள் இன்று யுத்தங்கள், தீவிரவாதங்கள், பேரழிவுகள் அல்லது புதிதாக கண்டறியப்பட்ட வியாதிகள் மற்றும் தொற்று வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உலகமானது இயற்கை பேரழிவுகள் மற்றும் பொருளாதார வீழ்ச்சியின்நிமித்தம் இன்னும் அதிகமான பிரச்சனைகளில் சிக்கிக் கொள்ளவிருக்கிறது. தற்போதுள்ள நோய்களின் அறிகுறிகள் இன்னும் மோசமான விதத்தில் அதிகரித்துவிடும்; அநேக சக்திவாய்ந்த வைரஸ்களும் தோன்றும். புதிதாக கண்டறியப்பட்ட அநேக வியாதிகள் பெருகும்.

எப்படியிருந்தாலும், மனுக்குலத்தையும் சகல காரியங்களையும் உண்டாக்கிய அன்பின் தேவன் தம்முடைய அபரிதமான அன்பையும், மகத்துவத்தையும் வல்லமையின் கிரியைகள் மூலமாக காண்பிக்கின்றார். ஆகவே, அவர் இரட்சிப்பின் பாதைக்குள் எண்ணற்ற ஆத்துமாக்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார், இனியும் அநேகரை நடத்துவார்.

# நீடிய பொறுமையின் கனி



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.'' (கலாத்தியர் 5:22–23).

பல நிலவரங்களில் மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா இல்லையா என்பது அவர்கள் நீடிய பொறுமையாக இருக்க முடியுமா அல்லது முடியாதா என்பதைச் சார்ந்துள்ளது. கூடவே, ஒருவரது படிப்பு, வேலை மற்றும் தொழில்களின் முடிவு அந்த நபரின் நீடிய பொறுமையை சார்ந்து மிகவும் வேறுபட்டு காணப்படுகிறது. ஆவிக்குரிய காரியங்களிலும் இது அதே போன்றுதான் உள்ளது. நாம் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொள்ள விரும்பும்போது, நம்முடைய நீடிய பொறுமையை சார்ந்து கனி வித்தியாசமானதாக காணப்படும். நாம் இந்த நீடிய பொறுமையின் கனியை தியானிப்போம்.

**1. நீடிய பொறுமையின் கனிக்கு ''நீடிய பொறுமை'' என்ற வார்த்தை அவசியமில்லை.**

பரிசுத்த ஆவியின் கனிகளில் ஒன்றாயிருக்கிற நீடிய பொறுமை என்பது எல்லாவற்றிலும் நீடிய பொறுமையாக இருப்பதாகும். இந்த நீடிய பொறுமை என்பது 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் ஆவிக்குரிய அன்பில் எழுதப்பட்டுள்ள நீடிய பொறுமையைவிட ஒரு படி உயரிய நிலையில் உள்ள நீடிய பொறுமையாகும்.

ஆவிக்குரிய நீடிய பொறுமை என்பது தீமையோடு சகித்துக் கொண்டிருப்பதல்ல. ஆனால் நன்மையோடு சகித்துக் கொண்டிருப்பதாகும். உண்மையில், உங்கள் இருதயத்தில் ஆவிக்குரிய பொறுமையை நீங்கள் பண்படுத்தியிருந்தால், பின் நீங்கள் நீடிய பொறுமையாய் இருப்பதற்கு முயற்சிக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு பரந்த பெரிய இருதயம் இருக்கும்.

உதாரணமாக, ஒரு புதிதாக பிறந்த குழந்தை உயரிய காய்ச்சலில் இருக்கும்போது, குழந்தையை பராமரித்துக்கொண்டு தாயானவளும் கஷ்டப்படுவாள். அவள் இரவு முழுவதும் விழித்திருப்பாள் அல்லது சாப்பிட முடியாமல் இருப்பாள். ஆனால் தன்னைக் குறித்து யோசிக்க அவளுக்கு நேரம் இருக்காது. அவள் தனது குழந்தையை எப்படி இன்னும் சௌகரிகமாக்கலாம் என்பதில் மட்டுமே கவனம் செலுத்துவாள். குழந்தையின் காய்ச்சல் கொஞ்சம் குறைந்து விட்டாலே, அவள் மிகவும் சந்தோஷமாகிவிடுவாள். அவள் தனது பாடுகளைக் குறித்து இன்னும் யோசிக்கவே மாட்டாள்.

ஆவிக்குரிய நீடிய பொறுமை என்பது இதற்கு ஒப்பாயிருக்கிறது. அது தனிப்பட்ட இலக்காயிருந்தாலும் அல்லது உங்கள் பரிசுத்தமாகுதலுக்காக அல்லது தேவனுடைய மகிமைக்காக இருந்தாலும் நீங்கள் உங்கள் இலக்கை அடையும் வரை கஷ்டங்கள் இருக்கலாம். நீங்கள் விசுவாசத்தோடும் அன்போடும் காத்திருக்க முடியும். காரணம் நீங்கள் அதின் கனிக்காக நம்பிக்கையோடு எதிர்நோக்கி கொண்டிருக்கிறீர்கள். இக் கனியோடு, நீங்கள் நீடிய பொறுமையை காத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டியதில்லை. எந்த ஒரு சூழ்நிலையும் உங்களை கிளர்ச்சியடைய செய்யாது; அமைதியாக உங்களால் இருக்க முடியும்.

**2. மூன்று வகையான ஆவிக்குரிய நீடிய பொறுமை**

**முதலாவது, இருதயத்தை மறுஉருவாக்கம் செய்வதற்கு நீடிய பொறுமை வேண்டும்.**

நம்முடைய இருதயத்தில் அதிகமாக தீமை இருக்க இருக்க நீடிய பொறுமையாய் இருப்பதற்கு அந்த அளவு அதிகமாக கஷ்டமாயிருக்கும். லூக்கா 8:15ல் வாசிக்கிறோம், ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.''

நம்முடைய இருதயத்தை நல்ல இருதயமாகிய நிலமாக மாற்றுவதற்கு நமக்கு சகிப்புத் தன்மையும், முயற்சியும் தேவை. பரிசுத்தமாவதற்கு நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் உபவாசத்தோடும் ஊக்கமாக ஜெபிப்பதால் சத்தியத்திற்கு நம்மை நாம் கீழ்ப்படிய செய்ய வேண்டும். நாம் நேசித்து பழக்கமானவற்றை விட்டுவிட வேண்டும். மேலும் ஆவிக்குரிய ஆதாயமற்றவையாக சில இருப்பின், அவைகளை களைந்துப் போட வேண்டும்.

நாம் பாதியில் நிறுத்திவிடக்கூடாது அல்லது சில காலம் செய்ய முயற்சித்த பிறகு முயற்சியை விட்டுவிடக் கூடாது. நாம் பரிசுத்தமாகுதலின் கனியை முற்றும் அறுவடை செய்யும் வரைக்கும், நாம் இச்சையடக்கத்தோடு நம்முடைய சிறப்பை செய்து வார்த்தையில் நடக்க வேண்டும். நாம் களைகளை முற்றும் அகற்றுவதற்கு களைகளின் வேர்களை வேரோடு பிடுங்க வேலை செய்வது போல, நாம் பாவசுபாவங்களை வேரோடு பிடுங்கும் வரையில் நாம் ஜெபித்து நம்முடைய இருதயத்தை மாற்ற வேண்டும்.

சிலர் ஜெபத்தின்மூலமாக தங்கள் இருதயத்தில் ஏதோ களைந்துபோட்டது போல நினைக்கலாம்; ஆனால் மீண்டும் அவர்கள் இருதயங்களில் அதைக் கண்டறியலாம். பின்னர் சிலர் அதனால் சோர்வடைந்து போய்விடலாம். நீங்கள் பாவசுபாவத்தின் ஜென்ம வேரை பிடுங்கி எறியும் வரையில் நீங்கள் பொய்யான ரூபங்களை உங்களில் கண்டறியலாம். அதனால் நீங்கள் எந்த ஒரு ஆவிக்குரிய வளர்ச்சியும் அடையவில்லை என்ற அர்த்தம் ஆகாது. நீங்கள் வெங்காயத்தை உரிக்கும்போது, நீங்கள் அதே போன்ற தோல் திரும்ப திரும்ப வருவதைக் காணலாம். ஆனால் நீங்கள் தொடர்ந்து உரித்துக்கொண்டே இருக்கும் போது, அந்த வெங்காயமானது இறுதியாக ஒன்றுமில்லாமல் போய்விடும். இதே அடிப்படை கொள்கைதான் பாவசுபாவத்திற்கும் ஏற்கும்.

நீங்கள் அதை இன்னமும் களைந்துப் போடவில்லை என்ற காரணத்தால் சோர்ந்துப் போய்விடக் கூடாது. முடிவு பரியந்தம் நீடிய பொறுமை கொண்டவர்களாயிருந்து உங்களுடைய மறுமலர்ச்சிக்காக நம்பிக்கையோடு கடினமாக தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். உங்கள் மூலமாக காணக்கூடிய கனிகள் ஏதும் இல்லாவிட்டாலும்கூட, நீங்கள் நற்குணத்திலும் சத்தியத்திலும் இன்னமும் செயல்பட்டால், நீங்கள் சோர்ந்து போக மாட்டீர்கள்.

இவ்வழியில் நீங்கள் உங்கள் இருதயத்தை விருத்தசேதனம் செய்தால், உங்கள் ஆத்துமா செழித்தோங்கும். எல்லாமும் உங்களுடன் நலமாக செல்லும். நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

**இரண்டாவதாக, நாம் மற்றவர்களுக்காக நீடிய பொறுமையோடு இருப்பது அவசியம்**

வித்தியாசமான குணாதிசயம் மற்றும் கல்வியையுடைய மக்களோடு நீங்கள் சம்பாஷனை செய்யும்போது, நீங்கள் சில அசௌகரிகங்களை சந்திக்கலாம். சிறிய காரிங்கள் தொடங்கி ஆபத்தான காரியங்கள் வரைக்கும், நீங்கள் அவர்களோடு வித்தியாசமான சிந்தையுடையவர்களாயிருக்கலாம். அதனால் சமாதானமும் உடைந்துவிடலாம்.

ஆனால் பரிசுத்தமாகுதலுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறவர்கள் மற்றவர்களை தேவனுடைய விலையேறப்பெற்ற பிள்ளைகளாக கருதுவர். சூழ்நிலை எப்படிப்பட்டதாயிருந்தாலும் நபர்கள் எவ்வகையாயிருந்தாலும் அவர்களோடு இசைந்து போக முயற்சிப்பர். அவர்கள் இவ்விதமாக சமாதானத்தை நாட்டி அதை காத்துக்கொள்வர். அவர்கள் எப்போதும் நல்ல இருதயத்தோடு மற்றவர்களைப் புரிந்துக்கொண்டு, மற்றவர்களுடைய ஆதாயத்தை தேடுகையில் சகித்துக் கொண்டிருப்பர். மற்றவர்கள் தீமையோடு நடந்து கொண்டிருந்தாலும் அவர்கள் அவர்களைச் சகித்துக் கொண்டிருப்பர். அவர்கள் தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்வர்.

நாமும்கூட மற்றவர்களை சுவிசேஷிக்கும்போது அல்லது மக்களுக்கு ஆலோசனைக் கொடுக்கும் போது அல்லது தேவனுடைய ராஜ்ஜியத்தின் வேலையை செய்வதற்கு திருச்சபை பணியாளர்களை பயிற்றுவிக்கும்போது நீடிய பொறுமை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். சிலர் நீண்ட காலம் சத்தியத்தை அறிந்திருந்தாலும் அவர்கள் புதுபித்தலில் தாமதமாக இருந்து உலகத்தை சிநேகிப்பர். நாம் அவர்களுக்காக கண்ணீரோடும் துயரத்தோடும் விண்ணப்பம் செய்து அவர்களை சகித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்விதமாக நாம் நீடிய பொறுமையின் விதையை விதைத்தால், நீங்கள் நிச்சயமாக தேவனுடைய நீதியின்படி நற்கனிகளை பெறுவீர்கள்.

நீங்கள் சில ஆத்துமாக்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்கையில் அவர்கள் மாறும்வரைக்கும் சகித்துக்கொண்டிருந்தால், அவர்கள் அனைவரையும் இருதயத்தில் சுமப்பதற்கு நீடிய பொறுமையோடு இருப்பீர்கள். அதனால், அநேக ஆத்துமாக்களை உயிர்ப்பிப்பதற்கு நீங்கள் அதிகாரத்தையும் வல்லமையையும் பெறுவீர்கள். மேலும் நீங்கள் உங்கள் இருதயத்தை கட்டுப்படுத்தி, தவறான குற்றச்சாட்டின்போதுகூட சகிப்புத்தன்மை என்னும் விதையை விதைத்தால், தேவன் நீங்கள் ஆசீர்வாதத்தின் கனியை அறுவடை செய்யும்படி செய்வார்.

**மூன்றாவதாக, தேவனோடு உள்ள உங்கள் உறவில் நீடிய பொறுமை உங்களுக்கு அவசியம்**

நீங்கள் ஜெபித்து, தேவனிடத்தில் ஏதாகிலும் கேட்கும்போது, பதில்களைப் பெற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு நீடிய பொறுமை அவசியம். மாற்கு 11:24ல் வாசிக்கிறோம், ''ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.''

தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு பதிலளிப்பார் என்பன போன்ற மேலும் பல வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் உள்ளன. ஆனால் பல நிலைகளில் ஜனங்களிடத்தில் நீடிய பொறுமை இல்லாத காரணத்தால் அவர்கள் பதில்களைப் பெறுவது இல்லை.

மக்கள் உடனடி பதிலைக் கேட்கையில் தேவன் அவர்களுக்கு உடனே பதிலளிக்காமல் இருக்கலாம். தேவன் அவர்களுக்கு மிகச் சரியான மிக ஏற்ற நேரத்தில் பதிலளிப்பார். காரணம் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்.

அவர்களது ஜெபக் குறிப்பு பெரிதும் மிக முக்கியமானதுமாக இருந்தால், தேவன் அவர்களுடைய ஜெபத்தின் அளவு நிறையும்போதுதான் பதிலளிப்பார். விவசாயிகள் விவசாயம் செய்யும் போது நீடிய பொறுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் சில பயிர்களை பல வாரங்கள் அல்லது மாதங்கள் பிறகு அறுவடை செய்ய முடியும்; ஆனால் இன்னும் சிலருக்கு பயிர்களை அறுவடைச் செய்ய ஓர் ஆண்டு அல்லது இன்னும் பல ஆண்டுகள்கூட எடுக்கலாம்.

பதில்களைப் பெற்றுக்கொள்ள நமக்கு விசுவாசம் உண்மையில் இருந்தால் நாம் பதில்களை கனியாக பெறும்வரையில் விசுவாசத்தோடு ஜெபித்து செயல்பட வேண்டும். மேலும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் உபத்திரவங்கள் அல்லது இருதயத்தை புடமிடும் சில பாடுகளின் வழியாக கடந்து செல்லும்போது, நமக்கு நீடிய பொறுமை இருந்தால் நற்கனிகளை விளைவிக்க முடியும்.

யோசேப்பு 17 வயதில் எகிப்திலே அடிமையாக விற்கப்பட்டான். அவன் ஊக்கமாக வேலை செய்தாலும் அவன் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிறைச் சாலைக்குச் சென்றான். அவன் தன்னை எப்போதும் காக்கிற தேவனை நம்பினான். சரியான நேரத்தில் சிறப்பான காரியங்களை கொடுக்கிற தேவனுடைய அன்பை உறுதியாக விசுவாசித்தான். பார்வோனுக்கு அடுத்ததான எகிப்தின் இரண்டாம் அதிபதியாக மாற தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார்.

நியாயமான காரணம் ஏதுமில்லாமல் கஷ்டங்களை நீங்கள் சந்தித்தாலும், பரலோக பலன்களை விளைவிக்கும்படி தேவனுடைய வேலைகளை செய்து வெற்றியை ஜெயமாக பெறுவதற்கு உங்களை ஊக்கப்படுத்துகிறேன் (யாக்கோபு 1:2–4). நீடிய பொறுமை உங்கள் விசுவாசத்தை அதிகரித்து, உங்கள் இருதயத்தை அதிக பக்குவமடைய செய்து விசாலமானதாகவும் ஆழமானதாகவும் மாற்றும். நீடிய பொறுமையை நீங்கள் பரிபூரணமாக அடையப்பெற்றால் அவர் வாக்குப் பண்ணின தேவனுடைய பதில்களையும், ஆசீர்வாதங்களையும் நீங்கள் அனுபவிப்பீர்கள் (எபிரெயர் 10:36).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவன் உண்மையான பிள்ளைகளைப் பெறுவதற்காக ஆயிரம் வருஷங்களை ஒரு நாளைப் போல எண்ணி காத்திருக்கிறார். நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுக்கும் வேதனையை அவர் தாங்கிக் கொண்டார். இயேசுவும் சிலுவையின் பாடுகளை சகித்தார்; பரிசுத்த ஆவியானவரும்கூட மனித சீர்ப்படுத்துதலின் காலத்தில் விவரிக்க இயலாத பெருமூச்சுகளோடு தாங்கிக் கொண்டிருக்கிறார். இந்த தேவனுடைய அன்பை நினைவுகூர்ந்து பரிபூரண நீடிய பொறுமையை வேளாண்மை செய்ய உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

இப்படிச் செய்வதால் நீங்கள் உங்களுடைய பரம வீடுகளின் ஆசீர்வாதங்களின் கனிகளைப் பெறவும், பூமியிலே கால காலத்திற்கு அறுவடையின் மெய்யான சந்தோஷத்தை நீங்கள் அனுபவிக்கும் படியாகவும் ஆண்டவருடைய நாமத்தினால் நான் உங்களுக்காய் ஜெபிக்கிறேன் (சங்கீதம் 126:5–6).

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**

**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**

**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**

**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**

**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை ''அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்'' மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

''எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...'' [அப். 17:25]

''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' [அப். 4:12]



# முடிவு பரியந்தம்வரை நம்மை இரட்சிக்க விரும்பும் தேவனுடைய அன்பை நீங்கள் அறிவீர்களா?

தேவன் தவிர்க்க முடியாத நியாயத்தீர்ப்பின் போதும்கூட நீதியின் வரம்புக்குட்பட்டு மிகுந்த எல்லை வரைக்கும் தமது அன்பை நமக்கு காட்டுகிறார். இதன் காரணம், தீமை செய்பவர்கள் மற்றும் பாவிகள் ஆகிய இருவருமே மரணத்தின் வழியிலிருந்து அவர்கள் திரும்ப வேண்டும் என்று அவர் விரும்புவதால் (எசேக்கியல் 18:23). பின்வரும் வேதாகமச் சம்பவங்கள் மூலமாக இரட்சிப்பிற்காக வாய்ப்பு கொடுக்க விரும்பும் தேவனுடைய அன்பை நாம் உணரலாம். தேவனுடைய இரக்கத்தாலும் கிருபையாலும், நாம் பரிபூரண இரட்சிப்பை அடைய முடியும்.

## ▶▶ ஜலப்பிரளயத்தின் நியாயத்தீர்ப்பு: நீதிமானாகிய நோவாவின் மூலமாக கூடிய அளவு தேவன் அநேக மக்களை காப்பாற்ற விரும்பினார்.

ஆதியாகமம் 6ல், நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தின் நியாயத்தீர்ப்பு இருந்தது. தேவனுடைய அன்பு நீண்ட காலமாக பொறுமையாக காத்திருந்தது. ஆனால் மனிதர்களுடைய பொல்லாப்பு பூமியிலே மிகப் பெரியதாய் இருந்தது. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றம் நித்தமும் பொல்லாததாய் மாத்திரமே தொடர்ந்து இருந்ததால், நியாயத்தீர்ப்பு தவிர்க்கப்பட முடியாததொன்றாய் மாறிற்று.

அப்படிப்பட்ட நிபந்தனைகளிலும்கூட, தேவன் வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து பிரசங்கிக்கும்படி நோவாவை தேவன் உந்தி அவனை கேட்கின்ற யாரானாலும் பேழைக்குள் பிரவேசித்துக் காப்பாற்றப்படும்படி அனுமதித்தார். இருப்பினும் அவன் குடும்பத்தினர் தவிர வேறொருவரும் கவனித்துக் கேட்கவில்லை. நோவாவும் அவனுடைய குடும்பத்தினர் மட்டுமே பேழைக்குள் பிரவேசித்தனர். நியாயத்தீர்ப்புக்கான ஆயத்தம் அனைத்தும் நிறைவடைந்தது.

நோவா கதவை மூடிய பின்னரும்கூட, தேவன் மீண்டும் ஏழு நாள் கிருபையின் காலத்தை ஜனங்களுக்குக் கொடுத்தார். அவர்களோடு சேர்ந்து பாதுகாக்கப்படும்படிக்கு யாராகிலும், பேழையின் கதவை தட்டுவார்களா என்று அவர் காத்திருந்தார். அவர் நீதியின்படி நியாயத்தீர்ப்பை நடத்த வேண்டும் என்றாலும்கூட அவர்கள் காப்பாற்றப்படும்படிக்கான வாய்ப்பை நீட்டிப்பதினால் மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற தேவனுடைய ஊக்கமான இருதயத்தை நம்மால் உணர முடிகிறது.

## ▶▶ சோதோம் கொமோராவின் நியாயத்தீர்ப்பு: நீதிமானாகிய ஆபிரகாமின் அன்பினால் நீதி பரிபூரணப்பட்டது.

ஆதியாகமம் 18ல், தேவன் ஆபிரகாமுக்கு முன்பாக தோன்றி சோதோம் கொமோராவின் நியாயத்தீர்ப்பைக் குறித்து முன்னதாகவே அவனிடம் அறிவிக்கிறார். அங்குள்ள ஜனங்களை அவர் நியாயந்தீர்ப்பதற்கு முன்னதாக, அவர் அவர்களுடைய பாவங்களையும் தீமைகளையும் இரண்டாவது முறை பரிசோதிக்கிறார். அவர் இன்னும் ஒரு மனிதனை காப்பாற்ற விரும்பினார்.

நீதிமானாகிய ஆபிரகாமின் பரிந்துரை ஜெபத்தின் மூலமாக அவர் ஜனங்களுக்கு அதிக வாயப்பளிக்க விரும்பினார். தேவனுடைய இந்த இருதயத்தைப் புரிந்துக்கொண்டு அவர்களுக்காக அன்போடு ஆபிரகாம் பரிந்துரைப்பான் என்பதை அவர் அறிவார். இறுதியாக, ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றான். அவர்களில் பத்து நீதிமான்கள் காணப்பட்டால் தேவன் அந்தப் பட்டணங்களை அழிக்கமாட்டார் என்று வாக்குப்பண்ணினார்.

இருப்பினும், தேவன் தமது பிரதான தூதர்களை அனுப்பி சோதோம் பட்டணத்தைச் சுற்றி உற்றுப்பார்க்கச் செய்தபோது, அவர்களில் பத்து நீதிமான்கள்கூட இல்லை. இறுதியாக அக்கினியின் நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வந்தது. அதே நேரத்தில், தேவன் ஆபிரகாமை நினைத்து அவன் சகோதரன் மகனான லோத்தையும் அவன் குமாரத்திகளையும் அவர் காப்பாற்றினார்.

இப்படித்தான் முடிவு மட்டும் அன்போடு தேவன் நீதியை நிறைவேற்றுகிறார்.

## ▶▶ நினிவேயின் நியாயத்தீர்ப்பு : கடைசி க்ஷணப்பொழுது மட்டும் நினிவேயின் மக்களுக்கு தேவனுடைய இரட்சிப்பின் கரம் நீட்டப்பட்டது.

யோனா 1ல், தேவன் தீர்க்கதரிசியாகிய யோனாவினிடத்தில் மிகப் பெரிதான அழிவு நினிவே பட்டணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று பிரசங்கிக்கச் சொன்னார். அவர்களுடைய அக்கிரமம் தேவனுக்கு முன்பாக வந்துவிட்டபடியால், அந்த பட்டணம் அழிக்கப்பட அனுமதிப்பது தேவனுடைய நீதிக்கு எதிரானது அல்ல. ஆனாலும் அவர்கள் பாவ அறிக்கைச் செய்து பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், இரட்சிப்பைப் பெறவும் தேவன் அவர்களுக்கு வாய்ப்பளித்தார்.

நினிவேயின் ராஜா உட்பட மக்கள் அனைவரும் உபவாசித்து தேவனை நோக்கிக் கதறி ஊக்கமாக கூப்பிட்டார்கள். அவர்கள் மிருகஜீவன்களையும் உபவாசிக்கச் செய்து, அவர்கள் கைகளிலிருந்த கொடுமையையும் தங்கள் பொல்லாத வழிகளையும் விட்டுத் திரும்பினர். தேவன் அவர்கள் கிரியைகளை கண்டபோது, தாம் அவர்கள் மீது வருவிப்பேன் என்று சொன்ன தீமைக்காக அவர் மனஸ்தாபப்பட்டார். அவர் அதை நடப்பிக்கவில்லை (யோனா 3:10). இருப்பினும், நூறு வருடங்களுக்குப் பிற்பாடு, அந்தப் பட்டணம் முழுவதும் பாவத்தாலும் தீமையாலும் மீண்டும் நிறைந்தது. அதனால் நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது வந்தது. இந்த முறை, அவர்கள் மனந்திரும்பவில்லை, அந்தப் பட்டணம் முழுவதும் கி.பி. 609ல் வீழ்ந்தது.

அதுவரைக்கும் அவர்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கு தேவன் அவர்களுக்கு எண்ணிறந்த வாய்ப்புகளை கொடுத்தார். தேவன் கடைசி க்ஷணப்பொழுது வரைக்கும் அவர்களுக்கு தமது இரட்சிப்பின் கரத்தை நீட்டினார். ஆனால் ஜனங்கள் தான் இரட்சிப்பின் அந்த வாய்ப்பை பற்றிக்கொள்ளாமல் அழிவின் பாதையை தெரிந்துக் கொண்டார்கள்.

## ▶▶ ஏழு-வருட மகா உபத்திரவக்காலம்; இரண்டு சாட்சிகள் மற்றும் 1,44,000 பிரசங்கியார்களின் மூலமாக தேவன் வெட்கமான இரட்சிப்புக்குத் தரும் கடைசி வாய்ப்பு.

சுவிசேஷம் பூமியின் கடைசிப் பரியந்தத்திற்குப் பிரசங்கிக்கப்படும்போது, ஆண்டவர் ஆகாயத்தில் வருவார். பின், சுவிசேஷத்தைக் கேட்பதால் இரட்சிக்கப்பட விசுவாசமுள்ளோரும் தேவனுடைய சித்தத்தில் வாழ்பவர்களும் உயிர்த்தெழுந்த சரீரத்தை தரித்து ஆகாயத்தில் க்ஷணப்பொழுதில் எடுத்துக் கொள்ளப்படுவர். இது தான் மனித பண்படுத்துதலின் முடிவு. பூமியிலே எஞ்சி இருப்பவர்களுக்கு பயங்கரமான ஏழு–வருட மகா உபத்திரவக்காலம் காத்திருக்கிறது.

ஆனால் தேவன் சுவிசேஷத்தைக் கேளாமல் பூமியிலே எஞ்சி விடப்பட்டவர்களுக்காக ஒரு இரட்சிப்பின் வழியை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டுள்ள இரண்டு சாட்சிகள் மற்றும் 1,44,000 பிரசங்கியாளர்களின்மூலமாக அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வார்களேயானால், அவர்கள் எளிமையாக இயற்கை பேரழிவுகள் அல்லது யுத்தங்களை கடந்து இரட்சிப்பை அடைவர். இவ்வழியில், தேவன் முடிவு பரியந்தமும் இன்னும் ஒரு ஆத்துமாவை இரட்சிக்க விரும்புகிறார்.

இருப்பினும், சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசிக்கிறேன் என்று சொல்லியும் விசுவாசமில்லாதோர், அவர்கள் இரட்சிக்கப்பட இரத்தசாட்சிகளாக மாற வேண்டும். அவர்கள் இரட்சிப்பிற்கான கடைசி தருணத்தைப் பற்றிக்கொள்ள, மிருகத்தின் முத்திரையை அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் பயங்கரமான சித்திரவதைகளை கடந்துச் செல்ல வேண்டும். ஆனால் மிகச் சிலர் மட்டுமே இரத்தசாட்சியின் இவ்வழியை தெரிந்துக்கொண்டு இரட்சிப்பைப் பெறுவர்.

# "கைக்குட்டை ஜெபத்தினால் வெளிப்பட்ட வல்லமையான கிரியைகள் என்னை ஆச்சரியப்படுத்தின"

செப்டம்பர் 2005ல், நான் அறிவர். ஜேராக் லீ அவர்களைச் சந்தித்தேன். அன்று முதல், என்னுடைய வாழ்க்கை புதிதானது. ஆண்டவருடைய சுவிசேஷத்தை பறைசாற்றுகிற மிஷனரியாக நான் மாற்றப்பட்டேன். நான் அறிவர். லீ அவர்களிடம் கற்றுக்கொண்ட ஜீவன் நிறைந்த பரிசுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுதும், தேவனுடைய வல்லமையை குறித்துப் பேசினபொழுதும் அநேகர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர்.

குறிப்பாக, அறிவர். லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையினால் வெளிப்படுகின்ற கிரியைகள் உண்மையிலேயே ஆச்சரியமானவைகள். அநேக ஜனங்கள் தங்களுடைய வியாதிகளில் இருந்து சுகம் பெறுகின்றனர்; அவர்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றது; அவர்கள் கைக்குட்டை ஜெபத்தினால் பதில்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

வல்லமையான கைக்குட்டைக்கு நன்றிகூறுமளவிற்கு லண்டன் மான்மின் சபையும் பெரிதான எழுப்புதலை அனுபவித்துள்ளது. என்னுடைய சபை அங்கத்தினர்கள் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இவை அனைத்தும் தேவனுடைய கிருபையினால்தான் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். 2014ல் சகோதரர் ரூபன் (தற்சமயம் வயது 17) வளர்ச்சி குறைபாட்டின் காரணமாக அறிவாற்றல் திறனில் பிரச்சனையோடு காணப்பட்டான். அவனால் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளமுடியாது. 2015ம் ஆண்டின் ஆரம்பத்தில், அவன் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக் கொண்டான். அதன்பின்பு அவன் மற்றவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளவும், ஐபாட்டில் தனக்கு வேண்டிய தகவல்களை தெரிந்தெடுக்கவும் கூடிய திறனைப் பெற்றுக்கொண்டான்.

குடியரசு நாடான தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்து வசிக்கும் சகோதரி ரோஸெட்டா அஸிடு மார்பக புற்றுநோயின்நிமித்தம் மரணத்தருவாயில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்நோய் ஜூலை 2013ல் அவளிடத்தில் கண்டறியப்பட்டது. ஆனால் அவள் லண்டன் மான்மின் சபையில் பதிவு செய்து, வல்லமையான கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து, அவளுடைய அறிகுறிகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. பிப்ரவரி 2015ல், அவள் முழுவதும் ஆரோக்கியமானாள்.

ஜூலை 2015ல், ஸ்வாஸிலெண்டிலிருந்து வந்த ஒரு குடும்பம் சபையில் பதிவு செய்தது. அவர்களுக்கு அநேக பிரச்சனைகள் இருந்தது; அவர்கள் விக்கிரகத்தை வணங்கி வந்தனர்; ஒவ்வொருவருக்கிடையில் பிரச்சனை இருந்து வந்தது. அவர்களுடைய மகள் மனநிலை பாதிக்கப்பட்டவளாய் இருந்தாள். அவர்கள் பதிவு செய்த பிறகு, அறிவர். லீ அவர்களின் "நற்குணம்" என்ற பிரசங்கத்தை கேட்டனர்; மூவான் மதுர தண்ணீரை குடித்தனர்; கைக்குட்டை ஜெபத்தையும் பெற்றுக்கொண்டனர். அதன்பிறகு, அவர்கள் சமாதானத்தை அடைந்தனர், அவர்களுடைய மகளும் குணமானாள்.


செப்டம்பர் 2015ல், உகாண்டாவிலிருந்து வந்து வசிக்கும் சகோதரி மரியா நோய்வாய்ப்பட ஆரம்பித்தாள். அவள் எடை குறைந்தது, எதையும் புசிக்க முடியாமலிருந்தாள். அவள் மருத்துவ மனைக்குச் சென்றபொழுது, அவளுடைய நோய்க்கு சிகிச்சை இல்லாதிருந்தது. அவளுடைய மருத்துவர் அவளுக்கு நோய் எதிர்ப்பு மண்டலத்தில் பிரச்சனை உள்ளது மற்றும் சரீரத்தின் திசுக்கள் பெலவீனமடைந்துள்ளது என்று கூறினார். அவளுடைய நிலைமை மோசமானது. அவள் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டாள்; அவளுடைய குடும்பத்தினர் அவளுடைய மரணத்திற்காக காத்திருக்க முடிந்ததே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவற்றை கேள்விப்பட்ட நான் அவர்களிடத்தில் தொலைபேசியில் பேசினேன்; அவர்களுக்குள் விசுவாசத்தை விதைத்தேன். நான் வல்லமையான கைக்குட்டையால் ஜெபித்தேன். அதன் பிறகு, என்னுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது, ஏறக்குறைய ஐந்து நிமிடங்களுக்கு நான் தலைமை போதகருடைய கரத்தைப் பார்த்தேன். மரியாளுடைய சுவாசம் இயல்பானது. அவள் நினைவிற்கு வந்தவளாய் தனக்கு கொஞ்சம் தண்ணீர் வேண்டுமென கேட்டாள். அதன்பிறகு சீக்கிரத்தில் அவள் ஆரோக்கியமானாள். அல்லேலூயா!

ஆகஸ்டு 2015ல், நானும் என் கணவரும் GCN மூலமாக மான்மின் கோடை சுற்றுலா முகாமில் இணைந்துக் கொண்டு, அதிகமான கிருபைகளைப் பெற்றோம். என் கணவர், மிஷனரி டேவிட் முக்காசா கோடை சுற்றுலாமுகாமிற்கு சில நாட்களுக்கு முன்பிலிருந்து வலது தோள்பட்டை வலியால் அவதிப்பட்டார். அவரால் வலது கையை அசைக்கக்கூட முடியவில்லை. அவரால் தலைமுடியை வாருவதற்கு தன்னுடைய கையை உயர்த்த முடியவில்லை; தன்னுடைய ஆடைகளை அணியவும் இயலவில்லை. அவர் நடக்கின்றபொழுதும் வேதனையை அனுபவித்தார். ஆனால் தலைமை போதகர் தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் இரண்டாவது முறை நோயாளிகளுக்காக ஜெபத்தை ஏறெடுத்தபொழுது அவர் பூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் தன்னுடைய வலது கையை சுலபமாய் அசைக்கிறார்.

பரிசுத்த சுவிசேஷத்தை அறிந்துகொள்ளவும், தேவனுடைய அன்பில் வாசம்செய்யவும், மேய்ப்பருடைய மண்டலத்தில் வல்லமையான கிரியைகளை அனுபவிக்கவும், எங்களுடைய ஊழியத்தை சந்தோஷமாய் நிறைவேற்றவும் செய்த தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

மிஷனரி ஜேன் போலோகோமாவும்,
அவளது கணவர் மிஷனரி டேவிட் முக்காசாவும்.
லண்டன் மான்மின் சபை, U.K.



# "தோளின் கிழிந்துப்போன சுற்றுப்பட்டையிலிருந்து நான் சுகமடைந்தேன்"

அக்டோபர் 2006ல் மான்மின் தலைமை சபையில் நான் பங்குப்பெற ஆரம்பித்ததிலிருந்து, என்னுடைய வாழ்க்கை முழுவதுமாக மாறியது. நான் குடிப்பழக்கம், சூதாட்டம் மற்றும் குதிரைப் பந்தயத்தினால் சீரழிந்து கொண்டிருந்தேன். நான் சிலமுறை தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறேன். ஆனால் நான் மான்மினை சந்தித்த பின்னர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கத்தின்மூலம் அதிகமான கிருபைகளைப் பெற்றேன். நான் அவருடைய ஜெபத்தைப் பெற்ற பிறகு ஒரு புதிதாக்கப்பட்ட வாழ்க்கையை வாழத் துவங்கினேன்.

நான் புதிதாக்கப்பட்டதை காண்பது என் தாயாருக்கு பிரியமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. என்னுடைய தாய் சீயோலில் இருந்தபொழுது, அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் தீராத தலை வலியிலிருந்து சுகமானார்கள்.

கூடுதலாக, அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் பதினேழு ஆண்டுகளாக காணாமல் போயிருந்த என் அண்ணனை நான் கண்டுபிடித்தேன்.


மருத்துவருடைய கருத்தின்படி அவருடைய MRI ஸ்கேனில் தோள் தசையின் சுற்றுப்பட்டை கிழிந்து வீங்கியிருக்கிறது.

ஜூன் 2013ல், நான் ஒரு கட்டுமான இடத்தில் வேலை செய்துக் கொண்டிருந்தபொழுது ஏறக்குறைய இரண்டு மீட்டர் உயரமுள்ள இடத்திலிருந்து கீழே விழுந்து விட்டேன். என்னுடைய சுற்றுப்பட்டை கிழிந்தது. அதாவது, என்னுடைய தோளின் சுற்றுப்பட்டை என்னும் தசையானது மூன்று சென்டிமீட்டர் அளவிற்கு கிழிந்துப்போனது. மருத்துவமனையில் நான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென சொன்னார்கள். நான் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் வல்லமையின் கிரியைகள் வெளிப்பட்டிருப்பதை பார்த்திருந்ததால், அவருடைய வல்லமை மூலம் நான் குணமடைய விரும்பினேன்.


கண்காணி டேயின் கிம், வயது 60,
1 வது மாகாணம், தென்கொரியா

நான் மான்மின் ஜெப மையத்தின் கூட்டங்களில் பங்குப்பெற துவங்கினேன்; அதன் தலைவரான போக்னிம் லீ அவர்களின் பிரசங்கங்களை கேட்டேன். கோபம், கசப்புணர்வு போன்ற அசுத்த குணங்களைக் குறித்து நான் மனந்திரும்பினேன். அறிவர். லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையின் (அப். 19:11–12) ஜெபத்தை திருமதி. லீ அவர்கள் மூலமாக பெற்றுக்கொண்டேன். பின்னர் அறிகுறிகளில் முன்னேற்றம் தென்பட்டது; நான் மீண்டும் என்னுடைய வேலைக்குச் செல்ல முடிந்தது.

ஆனால் மே 2015ல், நான் கட்டுமான இடத்தில் எடைமிகுந்த ஒன்றை தூக்கிச் சென்றபொழுது, நான் என்னுடைய இடது தோள்பட்டை தசையில் வலியை உணர்ந்தேன். அது என்னுடைய தசையை ஏதோ ஒன்று மெல்லுவதைப் போன்ற வேதனையாக இருந்தது. என்னுடைய இடது கையை தோள் உயரம்கூட என்னால் உயர்த்த முடியவில்லை; என்னுடைய முடியைகூட என்னால் சுத்தம் செய்ய இயலவில்லை.

ஆகஸ்டு 2015ல் நடக்கவிருந்த மான்மின் கோடை சுற்றுலா முகாமில் நான் சுகத்தைப் பெறும்படிக்கு ஆயத்தப்பட்டேன். சுற்றுலா முகாமின் முதல் நாள் இரவிலே நடந்த தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் நோயாளிகளுக்கான அறிவர். லீ அவர்களின் ஜெபத்தை நான் விசுவாசத்தோடு பெற்றுக் கொண்டேன். வலி மறைந்துப்போனது, இப்போது என்னுடைய இடது கையை என்னால் சுலபமாய் பயன்படுத்த முடிகிறது. நான் 15 கிலோகிராம் எடையுள்ள ஒரு பொருளைகூட தூக்க முடியாமலிருந்தேன். ஆனால் தற்போது நான் 40 முதல் 50 **கிலோகிராம்** எடையுள்ள பொருட்களைகூட தூக்கமுடிகிறது.

என்னைப் புதிப்பித்து, குணப்படுத்திய என்னுடைய நல்ல பிதாவாகிய தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com